DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| OS.No. | : | 75/2016 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | ஹரிஹரகுமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.11.2025

**முதல் விசாரணை:**

1. வழக்கின் வாதி தேவி என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதியின் கணவர் பெயர், அவர் எந்த முகவரியைச் சேர்ந்தவர் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கின் பிரதிவாதிகளான நாராயணன் என்ற அழகப்பன் மற்றும் மெய்யம்மை – யை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி, வாதிக்காக வழக்கு தாக்கல் செய்வதற்காகவோ, அவருக்கு எதிரான வழக்கை எதிர்த்து நடத்துவதற்காகவும் என்னை சந்தித்தாரா என்றால் சந்தித்தார். எந்த வருடம் என்னை சந்திந்தித்தார் என்றால் பல வருடங்களுக்கு முன்பு இருக்கும். தேதி மாதம் எனக்குத் தெரியாது. பல வருடங்களுக்கு முன்பாக வாதி என்னை சந்திக்கும் போது அவருக்கு சுமார் என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 45 முதல் 55 வயதுவரை இருக்கும். பல வருடங்களுக்கு முன்பு வாதி என்னை சந்திக்கும்போது என்ன சொல்லி என்னிடம் சந்திக்க வந்தார் என்றால் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு மறுப்பு அறிவிப்பு அனுப்ப கோரி என்னை சந்திக்க வந்தார்.

2. வாதி என்னை சந்திக்க வரும்போது வாதி மட்டும் வந்தாரா அல்லது அவருடன் கணவர், குடும்பத்தார்கள் வந்தார்களா என்றால் பல வருடங்களுக்கு முன்பு நடைபெற்றதால் வாதி வந்தது மட்டும் ஞாபகம் உள்ளது. வாதிக்கு வழங்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை என்னிடம் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். வாதி பதில் வழக்கறிஞர் அறிவிப்பை வாதி வந்தபோதே தயார் செய்தேனா அல்லது எத்தனை நாட்களுக்கு பிறகு தயார் செய்தேன் என்றால் நான்கு நாள்களுக்கு பின்பு தயார் செய்தேன். வழக்கறிஞர் பதில் அறிவிப்பை வாதியை வரச்சொல்லி நான் அனுப்பினேனா அல்லது நானாகவே அனுப்பினேனா என்றால் நான் தயார் செய்து, அவரை வரச்சொல்லி அனுப்பினேன். நான் தயார் செய்த பதில் வழக்கறிஞர் அறிவிப்பை நானேதான் படித்து காண்பித்தேன். பதில் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் வாதி சொன்னதன்பேரில் தயார் செய்யப்பட்டதா அல்லது நான் தட்டச்சு செய்து அனுப்பப்பட்டதா என்றால் வாதி சொன்னதன்பேரில் என்னால் குறிப்பு எடுக்கப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு அனுப்பட்டது.

3. பதில் வழக்கறிஞர் அறிவிப்பில் நான் வாதியிடம் கையொப்பம் எதுவும் வாங்கினேனா என்றால் இல்லை. பொதுவாக வழக்கறிஞர்கள் தயார் செய்யும் வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பதில் வழக்கறிஞர் அறிவிப்பிலோ சம்மந்தப்பட்டவரிடம் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து பெற வேண்டும் என்ற விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.3 ஆனது நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆனது நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் வாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் வாதிக்காக அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் எதுவும் என்னால் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுத்தேன். நான் கொடுத்த பதில் வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலில் முத்திரை இட்டு கொடுத்தேனா என்றால் முத்திரை இட்டுதான் கொடுத்தேன்.

4. வாதிக்காக பதில் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பிய பிறகு வாதி என்னை சந்தித்தாரா என்றால் சந்தித்தார். அது எத்தனை நாட்களுக்கு பிறகு சந்தித்தார் என்றால் இரண்டு மூன்று முறை என்னை சந்தித்தார், சரியாக எனக்கு ஞாபகம் இல்லை. உண்மையிலேயே வாதிக்காக நான் இந்த பதில் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பி

இருந்தால் நான் அவரிடம் எல்லா பக்கத்திலும் கையொப்பம் வாங்கியிருப்பேன் என்றும், அவ்வாறு அனுப்பவில்லை என்பதால்தான் வாதியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பதில் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்புவதற்கு வாதி என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றும், சொல்லாமல் என்னால் பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, அவர் கூறியதன் அடிப்படையில்தான் ஐந்து காசோலை எண்கள் குறித்து குறிப்பாக சொல்லப்பட்டு பதில் அறிவிப்பு அனுப்பட்டுள்ளது.

5. பி.வா.சா.ஆ.3 பதில் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகளுக்காக அவர்களை நன்கு தெரியும் என்பதால் என்னால் அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்திற்கும் வாதிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

1. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.3 ல் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் பதில் அறிவிப்பு கொடுத்த காலத்தில் வாதியிடம் பதில் அறிவிப்பில் கையெழுத்து வாங்கவேண்டும் என்ற அவசியம் எதுவும் இல்லை என்றால் சரிதான். மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் அறிவுறுத்தலின் அடிப்படையில்தான் தற்போதுதான் வழக்கறிஞர் அறிவிப்பில் தரப்பினர்களிடம் கையெழுத்து பெறும் நடைமுறை உள்ளது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு கையெழுத்து வாங்கவில்லை என்றாலும் அது தவறில்லை என்றால் சரிதான். மேற்படி நான் அறிவிப்பு கொடுத்த காலத்தில் நான் கொடுத்த மற்ற அறிவிப்பிலோ, வங்கிக்காக கொடுத்த மற்ற அறிவிப்பிலோ தரப்பினர் கையெழுத்து வாங்கி நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பு கொடுத்த சமயத்தில் நான் எந்தெந்த வங்கிகளில் வழக்கறிஞராக இருந்தேன் என்றால் கனரா வங்கி, சின்டிகேட் வங்கி, எச்.டி.எப்.சி வங்கி ஆகியவற்றில் இருந்தேன்.

2. தற்போது நான் கொடுக்கும் பதில் அறிவிப்பிலும் தரப்பினரிடம் கையொப்பம் வாங்குகிறேனா இல்லையா என்றால் தற்போது வாங்குகிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஓம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.